**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**கோயமுத்தூர் மாவட்டவானிலைசார்ந்தவேளாண் அறிக்கை**

**(07.10.2015முதல் 11.10.2015)**

**அறிக்கைஎண் 78/2015** **தேதி:06.10.2015**

**மாநிலத்தின் கடந்தவாரவானிலை**

தமிழகத்தின் பெரும்பாலானபகுதிகளில் பகல் நேரவெப்பநிலை29°செ முதல் 37°செ ஆகவும்,இரவு நேரவெப்பநிலை 21°செமுதல் 27°செஆகவும்பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேரவெப்பநிலை 18°செமுதல் 21°செஆகவும்,இரவு நேரவெப்பநிலை10°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழ் நாட்டில் பல இடங்களில் இலேசானதுமுதல் மிதமானமழைகாணப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலைகோயமுத்தூர் (07.10.2015முதல் 11.10.2015)**

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன்காணப்படும்.மிதமானதுமுதல் கனமழைஎதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்சவெப்பநிலை 30°செஆகவும், குறைந்தபட்சவெப்பநிலை22°செஆகவும், காலைநேரகாற்றின் ஈரப்பதம் 78-81சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 78-80சதவிகிதமாகவும் பதிவாகவாய்ப்புள்ளது. சராசரியாககாற்றின் வேகம் மணிக்கு13கி.மீ அளவுக்குபெரும்பாலும் தெற்குதிசையிலிருந்துவீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 07.10.15 | 12 | 30 | 22 | 7 | 79 | 79 | 13 | தெற்கு |
| 08.10.15 | 13 | 30 | 22 | 7 | 81 | 80 | 13 | தெற்கு |
| 09.10.15 | 8 | 30 | 22 | 7 | 78 | 78 | 13 | தெற்கு |
| 10.10.15 | 15 | 30 | 22 | 7 | 81 | 80 | 13 | தெற்கு |
| 11.10.15 | 12 | 30 | 22 | 7 | 80 | 79 | 13 | தெற்கு |

## வேளாண் அறிவுரை

- ✓ கோயமுத்தூர் மாவட்டத்திலுள்ளபொள்ளாச்சிபகுதியில் மழைஎதிர்பார்க்கப்படுவதால் நிலக்கடலைபயிரை அறுவடைசெய்யவும்.அறுவடைக்குப்பின் உலர் கருவி மூலம் காயவைக்கவும்.
- ✓ வரும் நாட்களில் மழைஎதிர்பார்க்கப்படுவதால் ஜுலைமாதம் நடவு செய்யப்பட்ட இறவை மரவள்ளிக்குமேலுரமாகஎக்டருக்கு 45 கிலோதழைசத்து மற்றும்120 கிலோசாம்பல் சத்து இட்டுமண் அணைக்கவும்.
- ✓ வரும் நாட்களில் மழைஎதிர்பார்க்கப்படுவதால்,மானாவாரிநிலங்களில் பயறுவகைபயிர்கள் மக்காச்சோளம் மற்றும் சோளம் விதைக்கவும். ஏற்கனவேவிதைப்பு முடிந்த இடங்களில் விட்டுப்போனபகுதியில் விதைக்கவும்.
- ✓ இறவையில் விதைக்கப்பட்டபச்சைப்பயறுமற்றும் உளுந்துபயிர்களில் மண்ணிலுள்ள அதிகஈரத்தன்மையால் கிளைகள்வளரவாய்ப்புள்ளது. கிளைகளைவெட்டிவிடவும்.
- ✓ வரும் நாட்களில் மழைஎதிர்பார்க்கப்படுவதால், இறவையில் பயிரிடப்பட்டகுளிர் காலகம்போடியாபருத்திமற்றும் மஞ்சள் பயிருக்குவடிகால் வசதிசெய்யவும்.

## குறுஞ்செய்தி

- ✓ கோயமுத்தூர் மாவட்டத்திலுள்ளபொள்ளாச்சிபகுதியில் மழைஎதிர்பார்க்கப்படுவதால் நிலக்கடலைபயிரை அறுவடைசெய்யவும். அறுவடைக்குப்பின் உலர் கருவி மூலம் காயவைக்கவும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை.**